தினமணி

**5 ஆயிரம் மூட்டை  சூரியகாந்தி விதை விற்பனை**

First Published : 24 Apr 2010 03:47:42 AM IST

வெள்ளக்கோவில்,ஏப். 23: வெள்ளக்கோவில் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்துக்கு வியாழக்கிழமை 5 ஆயிரம் மூட்டை சூரியகாந்தி விதை ஏல விற்பனைக்கு வந்திருந்தது.

இது சென்ற வாரத்தை விட 400 மூட்டை குறைவாகும். தரத்தைப் பொறுத்து  குறைந்தபட்ச விலை கிலோ ரூ.18.31 ஆகவும்,அதிக பட்சமாக ரூ.22.69 க்கும்  விற்பனையானது. தற்போது விலை ஏறுவதற்கு வாய்ப்பில்லை. வரும் வாரங்களிலும் இதே விலை தொடரக்கூடும் என விற்பனைக் கூட வட்டாரங்கள் தெரிவித்தன.

**ஏப்.30 வரை அரைவை செய்ய விவசாயிகள் வலியுறுத்தல்**

First Published : 24 Apr 2010 01:13:57 AM IST

தஞ்சாவூர், ஏப். 23: குறுங்குளம் அண்ணா சர்க்கரை ஆலையில் ஏப்.30 வரை அரைவை செய்ய வேண்டுமென தஞ்சாவூரில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறை தீர்க் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தினர்.

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகப் பிரதான கட்டடத்தில் மாவட்ட ஆட்சியர் எம்.எஸ். சண்முகம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் விவசாயிகள் பேசியது:

வெ. ஜீவக்குமார்: விண்ணாறு பகுதியில் அம்மன்பேட்டை, உமையவள் ஆற்காடு, கல்லணைக் கால்வாய், மடிகை ஆகிய பகுதிகளில் வாய்க்கால்களில் தூர்வாரும் பணியை மேற்கொள்ள வேண்டும்.

கடந்த காலங்களில் நெல் உற்பத்தி நினைத்து பார்க்க முடியாத வகையில் இருந்தது. தற்போது, கொள்முதல் செய்வதில் போதிய சாக்குகள் மற்றும் தொகை இல்லாத காரணத்தால் கொள்முதலில் தேக்கம் ஏற்பட்டுள்ளது. எனவே, தடையின்றி நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் நெல் கொள்முதல் செய்ய வேண்டும்.

உளுந்துப் பயிர் தற்போது முக்கியத்துவம் பெற்றுள்ளதால், இதை வேலி அமைத்து பாதுகாக்க மானிய உதவி செய்ய வேண்டும். உய்யகொண்டான் நீட்டிப்பு வாய்க்கால் பாசனப் பகுதி, புதிய கட்டளை மேட்டுவாய்க்கால் பகுதிகளுக்கு மிகக் குறைவாக நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 90 ஏரிகள் பாசனப் பகுதியாக உள்ள இப்பகுதிக்கு கூடுதலாக தூர்வார நிதி ஒதுக்க வேண்டும்.

சாமி. நடராஜன்: விவசாயத்துக்கு நாள்தோறும் 12 மணிநேரம் மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும். ஆரூரான் சர்க்கரை ஆலை நிகழாண்டு விவசாயிகளுக்கு வழங்கிய விதைக் கரும்பு சரியாக முளைக்காமல், கும்பகோணம் பகுதி விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, ஆலை நிர்வாகத்திடமிருந்து இழப்பீடு பெற்றுத் தர வேண்டும்.

கும்பகோணம் வட்டம், செருகுடி கிராமத்தில் திருமலைராஜன் ஆற்றிலிருந்து பிரியும் பூவாம்பூர் பாசன வாய்க்காலில் விவசாயிகள் பயன்பாட்டுக்கு பாலம் கட்டித் தர வேண்டும். மாங்குடியில் கீர்த்திமான் ஆற்றிலிருந்து பிரியும் மாங்குடி பாசன  வாய்க்காலைத் தலைப்பு மாற்ற வேண்டும்.

ரவிச்சந்தர்: அம்மையகரம் கிராமத்திலுள்ள அனைத்து பாசன வடிகால் வாய்க்கால்களிலும் தூர்வார வேண்டும். ஏடிடி 36 விதை நெல் திருவையாறு தொகுதி முழுவதும் 20 சத மானிய விலையில் வழங்க வேண்டும்.

ஏ.பி. சந்திரன்: விவசாயிகளுக்கு மானிய விலையில் மண்வெட்டி, தார் படுதா வழங்க வேண்டும்.

நடராஜன்: அய்யனாபுரத்தை அடுத்த புங்கனூரில் உள்ள பாலம் போக்குவரத்துக்கு உகந்ததாக இல்லையென்பதால், உடனடியாகப் புதிய பாலம் கட்டித் தர வேண்டும். வெண்ணாறு வடிநில கோட்டம் ஆனந்தக் காவேரி கரையின் வலதுபுறம் கரம்பையில் இருந்து பூதலூர் வரை செம்மண் கிராவல் அடிக்க வேண்டும். அய்யனாபுரத்தில் பெண்கள் குளிக்க வசதியாக படித் துறை கட்டித் தர வேண்டும்.

தங்கவேல்: மின் தட்டுப்பாடு காரணத்தால் ஆம்லாப்பட்டு கிராமத்தில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியில் நீர் ஏற்ற முடியாமல் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

எஸ். ராமநாதன்: மாங்குடி வாய்க்காலிருந்து பிரியும் கொண்டவட்டான்திடல் தலைப்பில் உள்ள தடுப்பு அணையில் ஏற்பட்டுள்ள பழுதைச் சரி செய்ய வேண்டும்.

பி. கோவிந்தராஜ்: அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையில் ஏப். 30-ஆம் தேதி வரை அரைவை செய்ய வேண்டும். துணை முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவித்தபடி வேளாண்மைக்கு நாள்தோறும் 16 மணி நேரம் மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும்.

**அரிசி, நெல் இருப்பு வைக்கும் நிறுவனங்கள் அரசுக்கு அறிக்கை அளிக்க வேண்டும்: ஆட்சியர்**

First Published : 24 Apr 2010 04:22:12 AM IST

திருச்சி, ஏப்.23: அரிசி, நெல் கொள்முதல் செய்து இருப்பு வைத்திருக்கும் அரிசி நிறுவனம், தனி நபர்கள் உரிய படிவத்தில் அரசுக்கு அறிக்கை அளிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர் தா. சவுண்டையா தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பது:

"திருச்சி மாவட்டத்தில் உள்ள அரிசி, நெல் ஆகியவற்றை கொள்முதல் செய்து இருப்பு வைத்திருக்கும் எந்தவொரு நிறுவனம் அல்லது தனி நபர்கள் நெல் அல்லது அரிசியை 10,000 மெட்ரிக் டன்னை (நாடு முழுவதுமிருந்து வாங்கப்பட்ட மொத்த அளவு) காரீப் பருவம் 2009}10 ஆம் ஆண்டில் அதிகமாக இருக்கும்பட்சத்தில் வாங்கப்பட்ட விவர அறிக்கையை உரிய படிவத்தில் மத்திய அரசு நிர்ணயித்துள்ள கால இடைவெளிக்குள் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு முதன்மைச் செயலரிடம் அளிக்க வேண்டும்.

25,000 மெட்ரிக் டன்னைவிட அதிகமாக நெல் அல்லது அரிசி வாங்கும்பட்சத்தில் வாங்கப்பட்ட விவர அறிக்கையை உரிய படிவத்தில் நிர்ணயிக்கப்பட்ட கால இடைவெளிக்குள் அரசு சார்புச் செயலர், உணவு, பொது விநியோகத் திட்டத் துறை, அறை எண் 288ஏ, கிரிஷி பவன், புது தில்லி } 110 001. (நிகரி எண் 001}23782213, இ}மெயில் ன்ள்ல்ஹ்34.ச்ல்க்ஃய்ண்ஸ்ரீ.ண்ய் என்ற முகவரியில் அளிக்க வேண்டும்.

10,000 மெட்ரிக் டன்களைவிட அதிகமாக நெல் அல்லது அரிசி வாங்கும் எந்தவொரு நிறுவனம் அல்லது தனி நபரால் அளிக்கப்படும் விவர அறிக்கையைச் சம்பந்தப்பட்ட மாநில அரசு தொகுத்து அரசு சார்பு செயலர் (கொள்கை 3) உணவு, பொது விநியோகத் திட்டத் துறைக்கு மாதந்தோறும் 10}ம் தேதிக்குள் அளிக்க வேண்டும். இதற்கான படிவங்கள் மத்திய உணவுத் துறை ஜ்ஜ்ஜ்.ச்ஸ்ரீஹம்ண்ய்.ய்ண்ஸ்ரீ.ண்ய் அல்லது மாநில உணவு வழங்கல் துறை ஜ்ஜ்ஜ்.ஸ்ரீர்ய்ள்ன்ம்ங்ழ்.ற்ய்.ஞ்ர்ஸ்.ண்ய் ஆகிய இணையதளங்களில் உள்ளன' என்றார் ஆட்சியர்.

**கொப்பரை கொள்முதல் நிறுத்தம்: விவசாயிகள் பாதிப்பு**

First Published : 24 Apr 2010 03:43:02 AM IST

Last Updated : 24 Apr 2010 09:25:49 AM IST

பல்லடம், ஏப். 23: வெளி மார்க்கெட் விலை நிலவரத்தால் கொப்பரை விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர். பல்லடம், சுல்தான்பேட்டை, பொங்கலூர் பகுதியில் பல லட்சம் தென்னை மரங்கள் உள்ளன. தென்னை விவசாயிகள் தேங்காய் விலை வீழச்சியால் பாதிக்கப்பட்டு வந்தனர். இதையடுத்து அரசு ஆதார விலை நிர்ணயம் செய்து நேபட்,

டான்பேட் சார்பில் கூட்டுறவு சங்கம் மூலம் அரசு கொப்பரை கொள்முதல் மையங்கள் அமைத்து விவசாயிகளிடம் கொப்பரை கொள்முதல் செய்யப்பட்டு வந்தது. இந்நிலையில் சேமிப்புக் கிடங்குகளில் இடவசதி இல்லை என்று கூறி கொப்பரை கொள்முதல் கடந்த மார்ச் 24ம் தேதி முதல் நிறுத்தப்பட்டது.
கொப்பரை வெளி மார்க்கெட்டில் கிலோ ரூ.33க்கு கொள்முதல் செய்யப்படுகிறது. விவசாயிகள் தங்களது கொப்பரைகளை வெளி மார்க்கெட்டில் குறைந்த விலைக்கு விற்று வருகின்றனர். அரசு கொப்பரை கொள்முதல் விலை கிலோ ரூ.44.50 ஆக உள்ளது. தற்போதைய வெளிமார்க்கெட் விலைக்கும் அரசு விலைக்கும் இடையே ரூ.11.50 வித்தியாசம் உள்ளது. இதனால் தென்னை விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். விரைவில் கொப்பரை கொள்முதலை துவங்கி விவசாயிகளை காப்பாற்ற வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

**சின்ன வெங்காயம் விலை உயர்வு: விவசாயிகள் மகிழ்ச்சி**

First Published : 24 Apr 2010 03:43:33 AM IST

பல்லடம், ஏப். 23: சின்ன வெங்காயம் விலை உயர்ந்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.
பல்லடம், பொங்கலூர், சுல்தான்பேட்டை பகுதியில் சின்ன வெங்காயம் சாகுபடி செய்யப்பட்டு அறுவடை செய்யப்பட்டு வருகிறது. துவக்கத்தில் சந்தைக்கு வெளி மாநில வெங்காய வரத்தால் உள்ளூர் சின்ன வெங்காயம் ஒரு கிலோ ரூ.8க்கு விற்றது. இதனால் ஏராளமான விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். இந்த நிலையில் சந்தைக்கு வெங்காயம் வரத்து குறைவால் விலை உயர்ந்து வருகிறது.
தற்போது ஒரு கிலோ ரூ.14 விலை கொடுத்து வியாபாரிகள் விவசாயிகளிடம் நேரடி கொள்முதல் செய்து வருகின்றனர். ஏக்கருக்கு 5 முதல் 7 டன் வரை மகசூல் கிடைக்கிறது.

**வறட்சி நிவாரணம் வழங்க விவசாயிகள் கோரிக்கை**

First Published : 24 Apr 2010 01:59:40 AM IST

தருமபுரி, ஏப்.23:தருமபுரி மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் வறட்சி நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியரிடம் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.
தருமபுரி ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டத்திற்கு ஆட்சியர் பெ. அமுதா தலைமை தாங்கினார்.
விவசாயி எஸ்.எ. சின்னசாமி அனைத்து விவசாயிகள் சார்பில் கோரிக்கை விடுத்தார். தருமபுரி மாவட்டத்தில் பருவமழை பொய்த்துவிட்டதால் இவ்வாண்டு அனைத்து விவசாய கிணறுகளிலும் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து கடுமையான வறட்சி ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயப் பயிர்கள் கருகி வருகின்றன.
இந்நிலையில், கால்நடைகளுக்கு தேவையான தீவனங்களை வெளிமாவட்டங்களிலிருந்து கொண்டு வந்து மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு பாதிப்புக்கேற்ப வறட்சி நிவாரணத்தை அவர்களுக்கு நேரடியாக வழங்க வேண்டும். பாலக்கோடு கரும்பு உற்பத்தி ஆலையில் நடைபெற்ற சமுதாய சீர்கேடுகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் சின்னசாமி.
வறட்சி நிவாரணம் கேட்டு அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது, வறட்சி பாதிப்பிலிருந்து விவசாயிகளை பாதுகாக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று ஆட்சியர் தெரிவித்தார்.

**மே 1 முதல் கால்நடைகளுக்கு செயற்கை கருவூட்டல் கட்டணம் குறைப்பு**

First Published : 24 Apr 2010 01:56:34 AM IST

தருமபுரி, ஏப்.23: தருமபுரி மாவட்டத்திலுள்ள அனைத்து கால்நடை மருந்தகங்களிலும் மே 1-ம் தேதி முதல் கருவூட்டல் கட்டணம் ரூ.10-ஆக குறைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஆட்சியர் பெ. அமுதா வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

மாவட்டத்தில் 3,02,798 மாடுகள், 78,758 எருமைகள் உள்ளன.

இவைகளுக்கு கால்நடைப் பராமரிப்புத் துறையின் கீழ் செயல்படும் மாவட்ட மருத்துவமனை, 2 நடமாடும் கால்நடை மருந்தகங்கள், 2 கால்நடை மருத்துவமனைகள், 12 தரம் உயர்த்தப்பட்ட கால்நடை மருத்துவ கிளை நிலையங்கள், 14 கால்நடை மருத்துவ கிளை நிலையங்கள், 31 கால்நடை மருந்தகங்கள் ஆகியவற்றில் செயற்கை கருவூட்டல் முறை செயல்படுத்தப்படுகிறது.

செயற்கை கருவூட்டல் மூலம் தரமான உயரின கலப்பின பசுக்கள், கலப்பின எருமைகள் ஆகியவற்றை உற்பத்தி செய்து பால் உற்பத்தியை அதிகரிக்க முடியும். கால்நடைகளுக்கு வழக்கமாக செயற்கை கருவூட்டலுக்கு ரூ.15 வசூலிக்கப்பட்டு வருகிறது. தற்போது இக்கட்டணம் ரூ.10 ஆக குறைக்கப்படுகிறது.

**பெங்களூரை பசுமையாக்க 5 லட்சம் மரக்கன்றுகள் நடப்படும்: புதிய மேயர்**

First Published : 24 Apr 2010 12:00:00 AM IST

பெங்களூர், ஏப்.23: பெங்களூரை மீண்டும் பசுமை மற்றும் குளுமை நகராக மாற்ற நகரில் 5 லட்சம் மரக்கன்றுகள் நடப்படும் என்று மேயர் எஸ்.கே. நடராஜ் தெரிவித்தார்.

÷பெங்களூர் மாநகராட்சியின் புதிய மேயராக பதவியேற்ற பிறகு நடராஜ் நிருபர்களுக்கு அளித்த பேட்டி:

÷மிகவும் குளுமையான பூங்காக்கள் நகரம் என்று பெயர் பெற்றது பெங்களூர். ஆனால் சில ஆண்டுகளாக வளர்ச்சிப் பணிகளுக்காக மரங்கள் வெட்டப்படுவதாலும், வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாலும் நகரின் இயற்கையான குளுமை தட்பவெப்ப நிலை மாற்றமடைந்து வெப்ப நிலையும், மாசுக்களும் அதிகரித்து வருகின்றன.

÷எனவே, நகரை மீண்டும் பசுமையான, குளுமையான அழகான நகராக மாற்ற நகரம் முழுவதும் 5 லட்சம் மரக்கன்றுகள் நடப்படும். போக்குவரத்து நெரிசலைக் குறைக்க தொலைநோக்குத் திட்டம் தீட்டப்படும். வாகனங்கள் நிறுத்துவதற்கு பல அடுக்கு பார்க்கிங் காம்பிளக்ஸ் வளாகங்கள் கட்டப்படும்.

÷குடிசைப் பகுதிகள் இல்லாத நகராக பெங்களூரை மாற்றுவோம். இதற்காக வீட்டு வசதித் திட்டங்கள் செயல்படுத்தப்படும். தற்போதுள்ள குடிசைப் பகுதிகளுக்கு பட்டா வழங்கி அடிப்படை வசதிகள் செய்யப்படும்.

÷நகர சாலைகள் சிக்னல்கள் இல்லாத சாலைகளாக மாற்றி அமைக்கப்படும். பெங்களூரை குப்பைகள் இல்லாத நகராக மாற்ற சிறப்புத் திட்டங்கள் தீட்டப்படும்.

குப்பைகளை முறையாக அகற்றிவிட்டால் அவை கழிவுநீர்க் கால்வாய்களில் சிக்கி அடைப்பு ஏற்படுத்துவதை தடுக்க முடியும். இதன் மூலம் மழை காலங்களில் வெள்ள நீர் தேங்காமல் இருக்கும்.

÷மழை காலங்களில் இரவு நேரம் செயல்படும் அதிகாரிகள், ஊழியர்கள் குழு அமைக்கப்படும். இவர்கள் மழை, வெள்ளம் பாதித்த பகுதிகளில் வேரோடு சாய்ந்த மரங்களை உடனே அகற்றி, வெள்ள நீர் வடிந்து செல்ல நடவடிக்கை எடுப்பார்கள்.

மின்தடை பிரச்னையை சரி செய்வார்கள். குடிநீர், வடிகால் வாரியம் மற்றும் மின் வாரியத்துடன் இணைந்து இந்த திட்டம் செயல்படுத்தப்படும்.

÷நகரில் அதிக வளர்ச்சிப் பணிகளை செய்து மக்களின் நம்பிக்கைக்கு ஏற்ப செயல்படுவோம். கட்சி வேறுபாடுகள் இல்லாமல் நகரின் 198 வார்டுகளிலும் வளர்ச்சிப் பணிகளை செய்வோம்.

மாநகராட்சி நஷ்டத்தில் இயங்குவதாகக் கூறுகிறார்கள். இதை லாபத்தில் செயல்பட வைப்பதற்காக சீரிய முறையில் வரிகள் வசூலிக்கப்படும் என்றார் அவர்.

**கடல் மீன்கள் வரத்து குறைவால் கோழி இறைச்சி விற்பனை அதிகரிப்பு**

First Published : 24 Apr 2010 03:45:30 AM IST

பல்லடம், ஏப். 23: கடல் மீன் வரத்து குறைவால் கோழி இறைச்சி விற்பனை அதிகரித்துள்ளது.

மீன்களின் இனப் பெருக்கத்தை கருத்தில் கொண்டு ஆண்டுதோறும் கிழக்குக் கடற்கரை பகுதியில் 45 நாட்களுக்கு கடலில் மீன் பிடிக்க மீன் வளத்துறை சார்பில் தடை விதிக்கப்படும்.

அதன்படி ஏப்ரல் 15ம் தேதி முதல் தடை விதிக்கப்பட்டு இருப்பதால் மீன் பிடிக்க யாரும் செல்லவில்லை. இதனால் மார்கெட்டிற்கு கடல் மீன் வரத்து குறைந்து உள்ளது. ÷தமிழகத்தின் பல்வேறு அணைகளில் தண்ணீர் இருப்பு குறைந்து இருப்பதால் போதிய மீன்கள் இல்லை இந்த நிலையில் மார்க்கெட்டிற்கு வரும் மீன்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.

இதனால் அசைவ பிரியர்களின் பார்வை கோழி இறைச்சி மீது திரும்பி உள்ளது. இதன் காரணமாக கோழி இறைச்சி விற்பனை அதிகரித்துள்ளது. கடந்த வாரம் ஒரு கிலோ ரூ.57 ஆக இருந்த கொள்முதல் விலை ரூ.58 ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. பள்ளி, கல்லூரி கோடை விடுமுறை காலம் என்பதால் நுகர்வு அதிகரித்து மேலும் விலை உயரும் என்று கோழிப் பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

**கடும் வறட்சி: விவசாயிகள் ஆர்ப்பாட்டம்**

First Published : 24 Apr 2010 06:00:09 AM IST

விருதுநகர், ஏப். 23: விருதுநகர் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும். கடும் வறட்சியால் பாதிக்கப்பட்ட தக்காளி, மிளகாய், மா, தென்னை, கரும்பு, மக்காச் சோளம், நெல், கடலை ஆகியவை ஒரு லட்சம் ஏக்கரில் பாதிக்கப்பட்டுள்ளன. இதற்கு கடும் தண்ணீர் தட்டுப்பாடும், வெபபமும் காரணமாகும். அதனால் பாதித்த பயிர்களுக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்று விவசாயிகள் சங்கம் வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடத்தியது.

விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம் அருகில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு மாவட்டத் தலைவர் அ. குருசாமி தலைமை வகித்தார். மாவட்டப் பொருளாளர் பி. நேரு முன்னிலை வகித்தார். ஆர்ப்பாட்டத்தில், மங்கையர்க்கரசி, என்.ஏ.ராமச்சந்திரராஜா, அம்மையப்பன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இதில் மாவட்டச் செயலாளர் அ. விஜயமுருகன் பேசுகையில், கடும் வறட்சிக்கு உள்ளாகியுள்ளது விருதுநகர் மாவட்டம். இம் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து, பாதிப்பைச் சந்தித்துள்ள விவசாயிகளுக்கு இழப்பீடு அளிக்க வேண்டும் என விவசாயிகள் சங்கம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

இக் கோரிக்கையை அரசுக்குப் பரிந்துரைப்பதாக மாவட்ட நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டது. ஆனால், இதுவரையில் எவ்வித அறிவிப்பையும் அரசு செயயவில்லை. இந் நிலையில், வாடிய பயிர்களைக் கண்டு, வருந்தும் விவசாயிகளுக்கு நிவாரணம் என்னவென்று தெரியவில்லை என்றார்.

மேலும் பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தின்கீழ் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு உரிய காப்பீட்டுத் தொகையை வழங்க வேண்டும். விவசாயத்துக்கு 12 மணி நேரம் மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும் என்றும் அவர் வலியுறுததினார்.

தினமலர்

**வேளாண் பல்கலையில் தாவர மரபணு வங்கி துவக்கம்**

கோவை: கோவையில், தமிழ்நாடு வேளாண் பல்கலையில் தாவர மரபணு வங்கி துவக்கப்பட்டது. இவ்வங்கியை, பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி துவக்கி வைத்து கூறியதாவது: இந்தியாவில் உள்ள வேளாண் பல்கலையில் முதல்முறையாக தாவர மரபணு வங்கி, கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலையில் நிறுவப்பட்டுள்ளது. சிறந்த குணாதிசயங்களை கொண்ட பயிர் இனங்கள் இவ்வங்கியில் சேமிக்கப்படும். பிற்காலத்தில் அவற்றை கொண்டு, வறட்சி தாங்கி வளரக்கூடிய மற்றும் பூச்சி, நோய் எதிர்ப்பு திறன் கொண்ட புதிய ரகங்கள் உருவாக்கப்படும். சோளத்தில் 4,780 வகையான மரபு இனங்கள் சேகரிக்கப்பட்டு, ஆராய்ச்சிக்காக பராமரிக்கப்பட்டு வருகிறது. இது இந்தியாவிலேயே அதிகம்.

இந்த வேறுபட்ட மரபு வகைகள், பன்னாட்டு ஆராய்ச்சி நிறுவனங்களிலும், தேசிய ஆராய்ச்சி நிறுவனங்களிலும் மற்றும் தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் இருந்து சேகரிக்கப்பட்டு, மரபணு வங்கியில் எதிர்கால ஆராய்ச்சிக்கு பராமரிக்கப்படும். இவ்வாறு, அவர் பேசினார். பல்கலையின் பயிர் இனப்பொருக்கம் மற்றும் மரபியல் மைய இயக்குனர் தியாகராஜன் கூறியதாவது: இவ்வங்கி, அண்மையில் துவங்கப்பட்ட தாவர மரபு வளத்துறை வளாகத்தில் நிறுவப்பட்டுள்ளது. இவ்வங்கிக்கு நெல் ஆராய்ச்சியில் சர்வதேச புகழ் பெற்ற விஞ்ஞானி ராமையா பெயர் வைக்கப்பட்டுள்ளது. 3 ஆயிரம் கன அடி கொள்ளளவு கொண்ட இவ்வங்கி, 5 சென்டிகிரேட் மற்றும் மைனஸ் 20 சென்டிகிரேட் குளிரூட்டப்பட்ட விதை சேமிப்புக்கு உகந்தது. அதிநவீன தொழில்நுட்பங்களை கொண்டு அமைக்கப்பட்டுள்ளதால், இவ்வங்கி அதிக சேமிப்பு திறன், மின்சிக்கனம் மற்றும் சுற்றுச்சூழலுக்கு ஏற்றதாகும். நெல், சிறுதானியங்கள், பயிறுகள், எண்ணெய் வித்துக்கள், பருத்தி, தீவனப்பயிர்கள், பழங்கள், காய்கறிகள், மூலிகைப்பயிர்கள் மற்றும் வனப்பயிர்கள் ஆகியவற்றின் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயிர் ரகங்கள், நாட்டு ரகங்கள் மற்றும் காட்டு இனங்களின் விதைகளை சேமிக்க முடியும். விதைகளை சேமிக்கும் முன் விஞ்ஞான முறையில் ஈரப்பதம் குறைக்கப்பட்டு, பின்னர் காற்று நீக்கப்பட்ட மூன்றடுக்கு அலுமினிய உறைகளில் நிரப்பப்பட்டு குளிரூட்டப்பட்ட அறைகளில் சேமிக்கலாம். சேமிக்கப்படும் விதைகளின் தன்மைக்கேற்ப, இவ்வங்கியில் 5 முதல் 20 ஆண்டு வரை விதைகளின் முளைப்புத்திறன் குறையாமல் சேமிக்கலாம். இவ்வங்கியில் சேமிப்பதன் மூலம், விதை புதுப்பிப்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் பயிர் செய்ய தேவையற்ற நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வங்கியின் பயன்பாட்டால் வயல்வெளியில் கலப்புகளை தவிர்க்க முடியும். இவ்வாறு அவர் கூறினார்.

**பசுமைக்குடில் அமைத்தாலும் கண்ணீர் ரோஜா விவசாயிகள் சோகம்**

காரமடை: பசுமைக்குடிலில் வளர்ந்த ரோஜா உள்ளிட்ட மலர்கள், உற்பத்தி குறைவு, நோய் தாக்குதலால் பாதிக்கப்பட்டுள்ளன. முதலீடு செய்த விவசாயிகள் சோகத்தில் ஆழ்ந்துள்ளனர். கோவை மாவட்டத்தில் ஜெர்மானிய தொழில் நுட்பத்துடன் பசுமை குடில் அமைத்து ரோஜா உள்ளிட்ட கொய் மலர்கள், தக்காளி பயிர் செய்துள்ளனர். ஆயிரம் சதுர மீட்டரில் பசுமை குடில் அமைத்து விவசாயம் துவங்க 12 லட்சம் ரூபாய் செலவாகிறது. 2008ல் காரமடை பகுதியில் 30க்கும் மேற்பட்ட விவசாயிகள் பசுமை குடில் அமைத்து, அதில் ரோஜா பயிர் செய்தனர். மிக குறைவான உற்பத்தி, பல்வேறு நோய் தாக்குதல்களால் ரோஜா பாதிக்கப்பட்டுள்ளது. காரமடை மேற்கு பள்ளத்தாக்கு கொய்மலர் சாகுபடி விவசாயிகள் சங்க தலைவர் சந்திரசேகரன் கூறியதாவது: காரமடை பகுதியில் 30 ஆயிரம் சதுர மீட்டர் பரப்பில் பசுமை குடில் அமைத்துள்ளோம். முழு பரப்பிற்கும் சொட்டு நீர் பாசனம் அமைத்து கொய் மலர்கள் பயிரிடப்பட்டுள்ளது.

ஒரு ரோஜா பசுமை குடிலில் நூறு கட்டு (ஒரு கட்டுக்கு 20 பூ) வரை உற்பத்தியாக வேண்டும். தற்போது 20 கட்டுக்கும் குறைவாகவே உற்பத்தியாகிறது. சில பசுமை குடில்களில் ஆறு மாதமாக ரோஜா பூ உற்பத்தி முற்றிலும் நின்று விட்டது. ஒரு கட்டு ரோஜா பூவின் விலை 8 முதல் 12 ரூபாய் வரை விற்கிறது. தினசரி வருமானம் 300 ரூபாய்க்கும் குறைவாகவே உள்ளது. கூலிக்கு ஆள் கிடைப்பதில்லை. வருமானம் இல்லை. விவசாயிகள் அனைவரும் வங்கி கடன் வாங்கி பசுமை குடில் அமைத்துள்ளனர். அரசு மானியம் 3.25 லட்சம் போக மீதி தொகைக்கு ஆண்டுக்கு 80 ஆயிரம் வரை வட்டி மட்டுமே செலுத்த வேண்டியுள்ளது. ஒவ்வொரு ஆண்டும், பசுமை குடில் பாதுகாப்புக்கு 50 ஆயிரம் வரை செலவாகிறது. உரம், பூச்சி மருந்துகளுக்கு அதிகமான தொகை செலவாகிறது. போதிய வருவாய் கிடைக்காததால் விவசாயிகள் திணறி வருகின்றனர். சில மாதங்களாக ரோஜா பூவில் இலைப்பேன் பூச்சியின் தாக்குதல் அதிகரித்திருப்பதால் பூவின் அளவு, உற்பத்தி வெகுவாக குறைந் துள்ளது. பசுமை குடிலில் மாற்று விவசாயம் செய்ய தோட்டக்கலைத் துறையினர் உதவ வேண்டும். தமிழக அரசு பசுமை குடில் விவசாயிகளுக்கு வழங்கிய மானியத்தை மலும் உயர்த்தி தர வேண்டும். வங்கி வட்டியை தள்ளுபடி செய்ய வேண்டும். இவ்வாறு சந்திரசேகரன் கூறினார்.

**இளநீர், தேங்காய் விற்பனையில் உடனடி பணம் தே.பருப்பு உற்பத்தி சரிவு**

கோபிசெட்டிபாளையம்: தேங்காய் மற்றும் இளநீர் தேவை அதிகரித்துள்ளதால், தேங்காய் பருப்பு உற்பத்தி தொடர்ந்து குறைந்து வருகிறது. தேங்காய் பருப்புக்கு 33 ரூபாய் வரை விலை கிடைத்த போதும், விவசாயிகள் தேங்காய் மற்றும் இளநீர் விற்பதில் அதிகம் ஆர்வம் காட்டி வருகின்றனர். ஈரோடு மாவட்டத்தில் பருவமழை தவறியதால் பனை மற்றும் தென்னை மரங்களில் உற்பத்தி வெகுவாக குறைந்து விட்டது. கோடைகாலத்தில் அதிகம் விளையும் நுங்கு மற்றும் இளநீர் உற்பத்தியும் எதிர்பார்த்த அளவில் இல்லை. நடப்பாண்டு கோடைக்காலத்தில் வெயிலின் தாக்கம் அதிகம் உள்ளதால், இளநீருக்கும் கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

மேலும், துவரம்பருப்பு விலை உயர்வால் சமையலில், தேங்காயை அதிகளவில் பொதுமக்கள் பயன்படுத்தி வருகின்றனர். குறிப்பாக ஹோட்டல்களில் பருப்புக்கு பதிலாக தேங்காய்தான் அதிகளவில் உணவுப் பண்டங்களில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதனால், இரண்டு மாதமாக தேங்காய் மற்றும் இளநீருக்கு நல்ல விலை கிடைக்கிறது. மேலும் உடனடியாக பணம் கிடைப்பதால், பெரும்பாலான விவசாயிகள் தேங்காய் பருப்பை உற்பத்தி செய்வதில் ஆர்வம் காட்டாமல் உள்ளனர். முற்றிய தேங்காயை பறித்து, உடைத்து, காயவைத்து தரமான தேங்காய் பருப்பை உற்பத்தி செய்ய குறைந்தபட்சம் ஒரு மாதம் வரையாகும். தேங்காய் பருப்பை உற்பத்தி செய்யும் தொழிலாளர்களுக்கு கூலி தர வேண்டிய நிலை உள்ளது. ஆனால், இளநீர் மற்றும் தேங்காயை கொள்முதல் செய்யும் வியாபாரிகள், விவசாயிகளை தேடிச்சென்று உடனடியாக பணம் பட்டுவாடா செய்கின்றனர். இதனால், தேங்காய் பருப்பு உற்பத்தி செய்வதை விட இளநீர் மற்றும் தேங்காயை விவசாயிகள் உற்பத்தி செய்து வருகின்றனர். மூன்று மாதமாக தேஙகாய் பருப்பு கிலோவுக்கு 30 ரூபாய் வரை கிடைக்கிறது. ஆனால், தேங்காய் பருப்பு உற்பத்தி எதிர்பார்த்த அளவில் இல்லை. கோபி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நடப்பு வாரம் 194 மூட்டைகள் தேங்காய் பருப்பு ஏலத்துக்கு வந்தது.

இது கடந்த வாரத்தை விட 15 மூட்டைகள் குறைவு. நடப்பு வாரம் தேங்காய் பருப்பு கிலோவுக்கு அதிகபட்சமாக 33.21 ரூபாய், குறைந்தபட்சமாக 31.91 ரூபாய்க்கு விற்றது. கடந்த வாரத்தை விட நடப்பு வாரம் தேங்காய் பருப்புக்கு 55 பைசா விலை குறைந்திருந்தது. நடப்பு வாரம் மூன்று லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மதிப்பில் தேங்காய் பருப்பு வர்த்தகம் நடந்தது. வெயில் காலத்தில் வழக்கமாக தேங்காய் பருப்பு உற்பத்தி அதிகளவில் இருக்கும். ஆனால், நடப்பாண்டில் இளநீர் மற்றும் தேங்காய்க்கு அதிக கிராக்கி உள்ளதால், தேங்காய் பருப்பின் உற்பத்தி கணிசமாக குறைந்துள்ளது.அதேவேளை எண்ணெய் மார்க்கெட்டில் ஸ்திரமற்ற நிலை நிலவுவதால், தேங்காய் பருப்புக்கு குறைந்த விலை கிடைப்பதாக விவசாயிகள் தெரிவித்தனர்.
ஓராண்டில் 702 டன் விற்பனை : கோபி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் புதன்கிழமை தோறும் தேங்காய் பருப்பு

ஏலம் நடந்து வருகிறது.கோபி, ஊத்துகுளி, கடத்தூர், சிறுவலூர், ஓடையா கவுண்டன்பாளையம் மற்றும் சுற்று வட்டாரப் பகுதி விவசாயிகள் தேங்காய் பருப்பை உற்பத்தி செய்து, ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விற்று பயனடைந்து வருகின்றனர்.சென்றாண்டு ஏப்ரல் மாதம் முதல் நடப்பாண்டு மார்ச் 31 ம் தேதி வரை 702 டன் தேங்காய் பருப்பு ஏலத்துக்கு வந்துள்ளது. ஏலத்தில் 1,656 விவசாயிகள் கலந்து கொண்டுள்ளனர். இரண்டு கோடியே 12 லட்சத்து 89 ஆயிரத்து 405 ரூபாய் மதிப்புக்கு தேங்காய் பருப்பு வர்த்தகம் நடந்துள்ளது.

**விவசாய கருத்தரங்கு**

வேப்பந்தட்டை:வேப்பந்தட்டை தாலுகா அனுக்கூரில் போல்கார்டு நிறுவனத்தின் சார்பில் கோடை உழவு செய்வது குறித்த வயல்தின விழாவில் விவசாய கருத்தரங்கு நடந்தது.போல்கார்டு மன்ற உறுப்பினர் செல்வராஜ் தலைமை வகித்தார். விற்பனை அலுவலர் வெங்கடேசன் வரவேற் றார். சிறப்பு அழைப்பாள ராக கலந்து கொண்ட போல்கார்டு மேலாளர் செந்தில்குமார் பேசுகை யில், இந்த பகுதியில் தற்போது பருத்தி அறுவடை முடிந்துள்ளது. அறுவடை செய்த பருத்தி வயலில் பருத்தி சிம்புகள் மற்றும் இலைகள் மற்றும் தாவர கழிவுகள் நிலத்தில் உள்ளன. இது போன்ற நேரத்தில் கோடை உழவு செய்வது அவசியம். கோடை உழவு செய்வதன் மூலம் வயலில் இலை தழைகள் மடக்கி நிலத்திற்கு நல்ல தொழு உரம் கிடைக்கும். களை செடியில் தங்கி பருத்தியை தாக்க கூடிய பூச்சிகள் கோடை உழவின் போது அழிக்கப்படும் என்றார். இதில் பருத்தி விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர். முடிவில் மனோகரன் நன்றி கூறினார்.

**பயிர் விளைச்சல் போட்டி : சாதனை படைத்த விவசாயிகளுக்கு கலெக்டர் பரிசு**

தஞ்சாவூர், : பயிர் விளைச்சல் போட்டியில் மாவட்ட அளவில் சாதனை படைத்த விவசாயிகளுக்கு கலெக்டர் சண்முகம் பரிசு வழங்கி பாராட்டினார்.தஞ்சையில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடந்தது.இதில் விவசாயிகள் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசியதாவது:பிரகலாதன்: மாவட்டத்தில் உள்ள பாசன வடிகால் சார்பாக திட்டவட்டமாக சட்டம் இயற்ற வேண்டும். தண்ணீர் வடிவதற்கு 'அ 'பதிவேட்டில் அமைத்து வடிகால்கள் அமைத்து தர வேண்டும்.

சந்திரபாலன்: கூட்டுறவு சங்கங்களில் பல ஆண்டுகளாக ஒரே செயலாளர் இருப்பதால் பல மோசடிகள் நடக்கிறது. எனவே செயலாளர்களை அடிக்கடி மாற்றம் செய்ய வேண்டும்.
சந்திரன்: நாகை, திருவாரூர் மாவட்டங்களில் தேசிய உணவு கிடங்கு இருக்கிறது. இதனால் விவசாயிகளுக்கு மானிய விலையில் விவசாய உபகரணங்கள் கிடைக்கிறது. தஞ்சை மாவட்டத்திற்கும் தேசிய உணவு கிடங்கு அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.ஜீவக்குமார்: ஜூன் மாதம் மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட வேண்டிய நிலையில் பல இடங்களில் தூர்வாரும் பணிகள் தொடங்கவில்லை. எனவே போர்க்கால அடிப்படையில் தூர்வாரும் பணிகளை தொடங்கி விரைந்து முடிக்க வேண்டும்.சவரிமுத்து: நடப்பு நிதியாண்டில் கொப்பரை அட்டைகளில் வி.ஏ.ஓ., சான்று பெற விவசாயிகள் அலைய வேண்டிய நிலை உள்ளது. எனவே வி.ஏ.ஓ.,க்கள் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளுக்கு நேரடியாக வரவழைத்து சான்றுகள் வழங்க உத்தரவு வழங்க வேண்டும்.ஜீவக்குமார்: உளுந்து இன்று முக்கியமான பண்டமாக மாறியுள்ளது. கட்டுப்படியாகும் விலையில் அரசு கொள்முதல் செய்ய வேண்டும். உளுந்து பயிரை காப்பாற்ற அரசு மான்யம் வழங்க வேண்டும். சாமிநடராஜன்:

தொடரும் மின்வெட்டால் விவசாயம், கிராமப் பகுதியில் குடிதண்ணீர் கிடைப்பது உட்பட பல்வேறு பாதிப்புகள் ஏற்பட்டுள்ளது. 9 மணி நேரம் மும்முனை மின்சாரம் வழங்கப்படும் என்று அறிவிப்பு நடைமுறையில் உள்ளது. ஆனால் இன்னும் அமலாக்கப்படவில்லை. கோவிந்தராஜ்: குருங்குளம் சர்க்கரை ஆலைக்கு கரும்பு வெட்டு ஆட்கள் பற்றாக்குறையாக உள்ளதால் தற்போது கரும்பு வெட்ட கூலி ரூபாய் 600 கொடுக்க வேண்டியது உள்ளது. இதனால் விவசாயிகளுக்கு அதிக அளவில் நஷ்டம் ஏற்படுகிறது. இதைத் தடுக்க ஆலை நிர்வாகம் ஏதாவது நடவடிக்கை எடுக்க

வேண்டும்.ரவிச்சந்தர்: அம்மையகரம் கிராமத்தில் உள்ள அனைத்து பாசன வடிகால் வாய்க்கால்களையும் தூர் வரவேண்டும். இந்த பகுதியில் தாழ்வான பகுதியில் செல்லும் மின் கம்பிகளை சரி செய்து தர வேண்டும்.ஜீவக்குமார்: வெண்ணாறு பகுதியில் அம்மன்பேட்டை, உமையவள்ஆற்காடு, கல்லணைக்கால்வாய் பகுதியில் மடிகை ஆகிய பகுதிகளில் தூர்வார வேண்டும். உய்யக்கொண்டான் நீட்டிப்பு வாய்க்கால் பாசன பகுதி, புதிய கட்டளை மேட்டுவாய்க்கால் ஆகிய பகுதிகளுக்கு தூர்வாரும் பணிக்கு மிகக்குறைவாகவே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த பகுதிக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.ராமநாதன்:

மாங்குடி வாய்க்கால்களில் இருந்து பிரிந்து செல்லும் கொண்டவிட்டான்திடல் தலைப்பில் உள்ள தடுப்பு அணை பழுது அடைந்துள்ளது. இதை உடனே சரி செய்ய வேண்டும். இவ்வாறு விவாதம் நடந்தது.தஞ்சையில் நடந்த விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் 2009-10ம் ஆண்டில் நடந்த பயிர் விளைச்சல் போட்டியில் மாவட்ட அளவில் நெல் பயிரில் முதலிடம் பெற்ற மேகளத்தூரைச் சேர்ந்த முத்துக்குமாரசாமிக்கு முதல் பரிசாக ரூபாய் 15 ஆயிரம், இரண்டாம் பரிசாக ஐம்பதுமேல் நகரம் பகுதியை சேர்ந்த அப்பாராசுக்கு ரூபாய் 10 ஆயிரம் வழங்கப்பட்டது.அதேபோல் உளுந்து பயிரில் முதல் பரிசு பெற்ற பெரும்புலியூர் பெரியசாமிக்கு ரூபாய் 10 ஆயிரம், ஒரத்தநாடு அருமுனை கோவிந்தராஜ்க்கு ரூபாய் 5 ஆயிரம் வழங்கப்பட்டது.

**மா, நெல்லி, முந்திரி கன்றுகள் விநியோகம்**

ஆண்டிபட்டி : ஆண்டிபட்டி பகுதியில் தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தின் கீழ் பரப்பு விரிவாக்க திட் டத்தில் மா, நெல்லி, முந்திரி ஒட்டு கன்றுகள் வினியோகம் செய்யப்பட உள்ளது.
தோட்டக்கலைத்துறையில் 2010-11ம் ஆண்டுக்கு பயனாளிகள் பட்டியல் தயாரிக்கப்பட்டு வருகிறது. விவசாயிகள் தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்வதற்கு மண் பரிசோதனை செய்து அதற்கு தக்கபடி பழக் கன்றுகள் நடவு செய்ய தேர்வு செய்ய வேண்டும். தேர்வு செய்யப்படும் கன்றுகள் மானிய விலையில் வழங்கப்பட உள்ளன. நுண்ணீர் பாசன திட்டத்தில் நுண்ணீர் பாசனம் அமைக்க மானியம் வழங்கப்படுகிறது. தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தை அணுகலாம்.

**தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் முன்கார் சாகுபடி செய்வதில் குழப்பம்**

ஸ்ரீவைகுண்டம் : தாமிரபரணி ஆற்றுப் பாசனத்தில் பொதுப் பணித்துறையின் குளறுபடியான நடவடிக்கை காரணமாக தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் முன்கார் சாகுபடி செய்வதில் குழப்பம் அடைந்துள்ளனர். அரசு முன்கார் சாகுபடி சம்பந்தமாக வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என தாமிரபரணி நதிநீர் பாதுகாப்பு பேரவையினர் அரசை வலியுறுத்தியுள்ளனர்.

இது குறித்து தூத்துக்குடி மாவட்ட நதிநீர் பாதுகாப்பு பேரவை அமைப்பாளர் நயினார் குலசேகரன் அரசு முதன்மை செயலருக்கு அனுப்பி உள்ள மனுவில் கூறியிருப்பதாவது, தூத்துக்குடி மாவட்டத்தில் தாமிரபரணி ஆறு மருதூர் அணைக்கட்டு மற்றும் ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டு ஆகியவற்றின் நான்கு பிரதான கால்வாய்கள் மூலம் 46 ஆயிரத்து 107 ஏக்கர் நஞ்சை நிலங்கள் சாகுபடியில் இருந்து வருகிறது. இந்த நஞ்சை நிலங்களுக்கு பிசானம் கார், முன்கார் என்ற சாகுபடி முறைகள் வழக்கத்தில் இருந்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல், மே மாதங்களில் அட்வான்ஸ் கார் சாகுபடிக்கு அரசு அனுமதி வழங்கி வருகிறது. தூத்துக்குடி மாவட்டத்தில் 2010ம் வருடத்திற்கு முன்கார் சாகுபடிக்கு எவ்வளவு நிலங்கள் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று பொதுப்பணித்துறையின் செயற்பொறியாளர் மூலம் பரிந்துரை செய்யப்பட்டு தமிழ்நாடு அரசு மார்ச் மாதம் 31ம் தேதி ஆணை பிறப்பித்து ஏப்ரல் 1ம் தேதி அணைகளில் இருந்து தண்ணீர் திறந்து விடவேண்டும். ஆனால் 2010ம் வருட முன்கார் சாகுபடிக்கு தற்போது ஏப்ரல் 13ம் தேதி

ஆகியும் அட்வான்ஸ் கார்சாகுபடிக்கு அரசு ஆணை பிறப்பிக்கவில்லை. இதனால் அட்வான்ஸ் கார் சாகுபடி செய்வதில் விவசாயிகள் குழப்பம் அடைந்துள்ளனர். நான்கு பிரதான கால்வாய்களிலும் சில இடங்களில் விவசாயிகள் முன்கார் சாகுபடிக்கு நாற்றங்காலும் போட்டு தண்ணீரை எதிர்பார்த்த வண்ணம் இருக்கின்றனர்.

தூத்துக்குடி மாவட்டத்தில் முன்கார் சாகுபடி, ரெகுலர் கார்சாகுபடி ஆகியவற்றில் தாமிரபரணி வடிநில கோட்ட பொதுப்பணித்துறை, நீர் ஆதார அமைப்பு செயற்பொறியாளர் குளறுபடியான நடவடிக்கைகளை செய்து வருகிறார். மேலும் 2009ம் வருடத்திற்கான முன்கார் சாகுபடி பரிந்துரையில் 1969ம் வருடத்தின் அரசு ஆணைப்படி அரசின் விதிகளையும், முறைகளையும் பின்பற்றாமல் 1969 வருடத்திற்கு முன் உள்ள விதிமுறைகளை பின்பற்றி அணைகளில் போதுமான தண்ணீர் இருந்தும் 8 ஆயிரத்து 124 ஏக்கர்களுக்கு மட்டும் முன்கார் சாகுபடிக்கு பரிந்துரை செய்து விவசாயிகளிடத்தில் குழப்பத்தை ஏற்படுத்தி உள்ளார். மேலும் ஒரு அறிவிப்பில் தூத்துக்குடி மாவட்டத்தில் மருதூர் அணை கீழக்கால், மேலக்கால் ஸ்ரீவைகுண்டம் வடகால், தென்கால் ஆகியவற்றின் 46 ஆயிரத்து 107 ஏக்கர் நிலங்களுக்கும் ஏப்ரல், மே, மாதங்களில் பாசனம் செய்ய அட்வான்ஸ்கள் என்ற சிறப்பு சாகுபடி உண்டு.

இந்த சிறப்பு சாகுபடி பகுதிகளுக்கு சாகுபடி செய்ய அரசு கடிதம் எண்.ஏ.2/10361/77 (எப்.டி) /30.9.1977ன் படி தண்ணீர் வழங்கப் படமாட்டாது என்றும், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் அறிவித்து தூத்துக்குடி மாவட்ட தாமிரபரணி பாசனத்திற்கு கார் சாகுபடிக்கும் முன் உரிமையை மறுத்து வருகிறார்.

பொதுப் பணித்துறை செயர் பொறியாளரின் இந்த குளறுபடியான நடவடிக்கைகள் மூலம் தூத்துக்குடி மாவட்ட தாமிரபரணி பாசன விவசாயிகள் ரெகுலர் கார், அட்வான்ஸ் கார் ஆகிய இரு போகங்களையும் இழந்து பிசானம் என்ற ஒரு போகத்திற்கு மட்டும் தள்ளப்படுகின்றனர். எனவே 46 ஆயிரத்து 107 ஏக்கர்களை கொண்ட தூத்துக்குடி மாவட்ட தாமிரபரணி பாசன விவசாயிகளின் பிசானம், அட்வான்ஸ் கார், ரெகுலர் கார், ஆகிய போகங்களை பற்றி, அரசின் நிலைப்பாடு பற்றி ஒரு விபரமான வெள்ளை அறிக்கையை தமிழ்நாடு அரசு வெளியிட வேண்டும். மேலும் அணைகளில் போதுமான தண்ணீர் இருப்பதால் 2010ம் ஆண்டுக்கு முன் அட்வான்ஸ் கார் சாகுபடி அனுமதியை 46 ஆயிரத்து 107 ஏக்கர்களுக்கும் வழங்கி அரசு உடனடியாக ஆணைப் பிறப்பிக்க வேண்டும் எனவும் தனது மனுவில் கூறி உள்ளார்.

**தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் முன்கார் சாகுபடி செய்வதில் குழப்பம்**

ஸ்ரீவைகுண்டம் : தாமிரபரணி ஆற்றுப் பாசனத்தில் பொதுப் பணித்துறையின் குளறுபடியான நடவடிக்கை காரணமாக தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் முன்கார் சாகுபடி செய்வதில் குழப்பம் அடைந்துள்ளனர். அரசு முன்கார் சாகுபடி சம்பந்தமாக வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என தாமிரபரணி நதிநீர் பாதுகாப்பு பேரவையினர் அரசை வலியுறுத்தியுள்ளனர்.

இது குறித்து தூத்துக்குடி மாவட்ட நதிநீர் பாதுகாப்பு பேரவை அமைப்பாளர் நயினார் குலசேகரன் அரசு முதன்மை செயலருக்கு அனுப்பி உள்ள மனுவில் கூறியிருப்பதாவது, தூத்துக்குடி மாவட்டத்தில் தாமிரபரணி ஆறு மருதூர் அணைக்கட்டு மற்றும் ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டு ஆகியவற்றின் நான்கு பிரதான கால்வாய்கள் மூலம் 46 ஆயிரத்து 107 ஏக்கர் நஞ்சை நிலங்கள் சாகுபடியில் இருந்து வருகிறது. இந்த நஞ்சை நிலங்களுக்கு பிசானம் கார், முன்கார் என்ற சாகுபடி முறைகள் வழக்கத்தில் இருந்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல், மே மாதங்களில் அட்வான்ஸ் கார் சாகுபடிக்கு அரசு அனுமதி வழங்கி வருகிறது. தூத்துக்குடி மாவட்டத்தில் 2010ம் வருடத்திற்கு முன்கார் சாகுபடிக்கு எவ்வளவு நிலங்கள் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று பொதுப்பணித்துறையின் செயற்பொறியாளர் மூலம் பரிந்துரை செய்யப்பட்டு தமிழ்நாடு அரசு மார்ச் மாதம் 31ம் தேதி ஆணை பிறப்பித்து ஏப்ரல் 1ம் தேதி அணைகளில் இருந்து தண்ணீர் திறந்து விடவேண்டும். ஆனால் 2010ம் வருட முன்கார் சாகுபடிக்கு தற்போது ஏப்ரல் 13ம் தேதி

ஆகியும் அட்வான்ஸ் கார்சாகுபடிக்கு அரசு ஆணை பிறப்பிக்கவில்லை. இதனால் அட்வான்ஸ் கார் சாகுபடி செய்வதில் விவசாயிகள் குழப்பம் அடைந்துள்ளனர். நான்கு பிரதான கால்வாய்களிலும் சில இடங்களில் விவசாயிகள் முன்கார் சாகுபடிக்கு நாற்றங்காலும் போட்டு தண்ணீரை எதிர்பார்த்த வண்ணம் இருக்கின்றனர்.

தூத்துக்குடி மாவட்டத்தில் முன்கார் சாகுபடி, ரெகுலர் கார்சாகுபடி ஆகியவற்றில் தாமிரபரணி வடிநில கோட்ட பொதுப்பணித்துறை, நீர் ஆதார அமைப்பு செயற்பொறியாளர் குளறுபடியான நடவடிக்கைகளை செய்து வருகிறார். மேலும் 2009ம் வருடத்திற்கான முன்கார் சாகுபடி பரிந்துரையில் 1969ம் வருடத்தின் அரசு ஆணைப்படி அரசின் விதிகளையும், முறைகளையும் பின்பற்றாமல் 1969 வருடத்திற்கு முன் உள்ள விதிமுறைகளை பின்பற்றி அணைகளில் போதுமான தண்ணீர் இருந்தும் 8 ஆயிரத்து 124 ஏக்கர்களுக்கு மட்டும் முன்கார் சாகுபடிக்கு பரிந்துரை செய்து விவசாயிகளிடத்தில் குழப்பத்தை ஏற்படுத்தி உள்ளார். மேலும் ஒரு அறிவிப்பில் தூத்துக்குடி மாவட்டத்தில் மருதூர் அணை கீழக்கால், மேலக்கால் ஸ்ரீவைகுண்டம் வடகால், தென்கால் ஆகியவற்றின் 46 ஆயிரத்து 107 ஏக்கர் நிலங்களுக்கும் ஏப்ரல், மே, மாதங்களில் பாசனம் செய்ய அட்வான்ஸ்கள் என்ற சிறப்பு சாகுபடி உண்டு.

இந்த சிறப்பு சாகுபடி பகுதிகளுக்கு சாகுபடி செய்ய அரசு கடிதம் எண்.ஏ.2/10361/77 (எப்.டி) /30.9.1977ன் படி தண்ணீர் வழங்கப் படமாட்டாது என்றும், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் அறிவித்து தூத்துக்குடி மாவட்ட தாமிரபரணி பாசனத்திற்கு கார் சாகுபடிக்கும் முன் உரிமையை மறுத்து வருகிறார்.

பொதுப் பணித்துறை செயர் பொறியாளரின் இந்த குளறுபடியான நடவடிக்கைகள் மூலம் தூத்துக்குடி மாவட்ட தாமிரபரணி பாசன விவசாயிகள் ரெகுலர் கார், அட்வான்ஸ் கார் ஆகிய இரு போகங்களையும் இழந்து பிசானம் என்ற ஒரு போகத்திற்கு மட்டும் தள்ளப்படுகின்றனர். எனவே 46 ஆயிரத்து 107 ஏக்கர்களை கொண்ட தூத்துக்குடி மாவட்ட தாமிரபரணி பாசன விவசாயிகளின் பிசானம், அட்வான்ஸ் கார், ரெகுலர் கார், ஆகிய போகங்களை பற்றி, அரசின் நிலைப்பாடு பற்றி ஒரு விபரமான வெள்ளை அறிக்கையை தமிழ்நாடு அரசு வெளியிட வேண்டும். மேலும் அணைகளில் போதுமான தண்ணீர் இருப்பதால் 2010ம் ஆண்டுக்கு முன் அட்வான்ஸ் கார் சாகுபடி அனுமதியை 46 ஆயிரத்து 107 ஏக்கர்களுக்கும் வழங்கி அரசு உடனடியாக ஆணைப் பிறப்பிக்க வேண்டும் எனவும் தனது மனுவில் கூறி உள்ளார்.

**மண்புழு உர யூனிட்டில் வேளாண் அதிகாரி ஆய்வு**

தென்காசி : கம்பிளி மண்புழு உர யூனிட்டில் துணை வேளாண்மை இயக்குநர் தேவசகாயம் ஆய்வு செய்தார்.
தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்கும் வகையில் மண்வளம், சுற்றுச்சூழலை பாதுகாத்திட மண்புழு கழிவு உர யூனிட் அமைத்து மண்புழு கழிவு உரம் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு மொத்த செலவில் 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. இதன்படி செங்கோட்டை வட்டாரத்தில் 16 மண்புழு கழிவு உர யூனிட் அமைக்கப்பட்டு மண்புழு கழிவு உரம் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.
கம்பிளி கிராமத்தில் வேலு என்பவர் வயலில் அமைக்கப்பட்டுள்ள மண்புழு உர யூனிட்டை துணை வேளாண்மை இயக்குநர் தேவசகாயம் பார்வையிட்டு ஆய்வு செய்த போது, 'மண்புழு கழிவு உரங்களை உற்பத்தி செய்து, தங்கள் வயல்களில் பயன்படுத்தி மண் வளத்தை காத்திட வேண்டும்' என்று கூறினார். விவசாயி வேலுவிற்கு 35 ஆயிரம் ரூபாய் மானிய தொகைக்கான காசோலை வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் செங்கோட்டை வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடகிருஷ்ணன், துணை வேளாண்மை அலுவலர் சுப்பிரமணியன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**பருத்தியில் தத்துப்பூச்சியை கட்டுப்படுத்த ஆலோசனை**

ஸ்ரீவில்லிபுத்தூர் : பருத்தியில் தத்துப்பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த பருத்தி ஆராய்ச்சி நிலைய முதல்வர் ராமலிங்கம் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

இவர் கூறியதாவது: சுமங்கலா, எம்.சி.யு.5, எல்.ஆர்.ஏ.5166 போன்ற ரக பருத்தி பயிர்களில் தத்துப்பூச்சி தாக்குதல் எளிதில் ஏற்படும். எஸ்.வி.பி.ஆர்.2 ரக பருத்தியில் இப்பூச்சி தாக்குதல் குறைவாகவே காணப்படும். இப் பூச்சிகள், இலையின் சாற்றினை உறிஞ்சும். இதனால் இலையில் சுருக்கங்கள் மேடுபள்ளங்கள் காணப்படும். மேலும் இலையின் ஓரங்களில் மஞ்சள் நிறம் தோன்றி முழுவதும் பரவி கருகி விடும்.

இப்பூச்சியால் தாக்கப்பட்ட பயிர்களுக்கு ஏக்கருக்கு 200 மில்லி டைமீதோயேட் அல்லது மீதைல் டெமட்டான் மருந்தை தெளித்து கட்டுப்படுத்தலாம். சான்டோவிட், இன்ட்ரான் கரைசலை ஒரு லிட்டர் தண்ணீருக்கு, அரை மில்லி வீதம் சேர்த்து இலைகளில் தெளிக்க வேண்டும், என்றார்.

---

தினத் தந்தி

## பாம்பாற்றில் கட்டப்பட உள்ள அணையை தடுக்காவிட்டால் அமராவதி பாசனத்தை காப்பாற்ற விவசாயிகளை திரட்டி போராட்டம் பழைய ஆயக்கட்டு பாசன சங்க தலைவர் அறிவிப்பு

*தாராபுரம், ஏப்.24–*

*பாம்பாற்றில் கட்டப்பட உள்ள அணையை தடுக்காவிட்டால், அமராவதி பாசனத்தை காப்பாற்ற விவசாயிகளை திரட்டி போராட்டம் நடத்தப்படும் என்று பழைய ஆயக்கட்டு பாசன சங்க தலைவர் அறிவித்து உள்ளார்.*

*அமராவதி அணை*

*உடுமலை அருகே உள்ளஅமராவதி அணை 90 அடி கொள்ளளவு கொண்டது. இந்த அணை மூலம் 55 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் நிலம் பாசனம் பெற்று வருகிறது. அதுபோன்று கரூர் வரைக்கும் ஆற்றின் கரையோரப்பகுதிகளில் இருக்கும் கிராமங்கள் குடிநீர் வசதி பெற்று வருகிறது.*

*இந்த அணைக்கு முக்கிய நீர் ஆதாரமாக பாம்பாறு உள்ளது. இந்த ஆற்றின் குறுக்கே கேரள அரசு மின்சாரம் தயாரிக்க தடுப்பணை கட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது. அணை கட்டப்பட்டால் அமராவதி அணைக்கு உட்பட்ட பாசனப்பகுதி கடும் பாதிப்புக்கு உள்ளாகும்.*

*இதனால் பாம்பாற்றில் அணை கட்டுவதை தடுத்து நிறுத்த வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்து வருகிறார்கள். இந்த நிலையில் அமராவதி பழைய ஆயக்கட்டு பாசன சங்க தலைவர் கே.கே.விஸ்வநாதன் ஒரு அறிக்கை வெளியிட்டு உள்ளார். அதில் கூறப்பட்டு இருப்பதாவது:–*

*ரூ.230 கோடி மதிப்பில் அணை*

*கேரள மாநிலம் இடுக்கி மாவட்டம் மறையூரில் இருந்து சுமார் 4 கி.மீ. தூரத்தில் உள்ள கோவில்கடவு வழியாக பாம்பாறு செல்கிறது. இந்த பகுதியில் இருந்து கீழே சுமார் 1 கி.மீ. தொலைவில் பாம்பாற்றின் குறுக்கே கேரள அரசு ரூ.230 கோடி மதிப்பில் அணை கட்டி, மின்சாரம் தயாரிக்க திட்டமிட்டு உள்ளது.*

*அமராவதி அணைக்கு முக்கிய நீர் ஆதாரமாக உள்ள பாம்பாற்றை தடுத்து கேரள அரசு அணை கட்டினால் திருப்பூர், கோவை, கரூர் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் மட்டுமல்லாமல் ஆற்றை நம்பி குடிநீர் எடுத்து வரும் கிராம மக்களும் பாதிக்கப்படுவார்கள்.*

எனவே இதை மத்திய–மாநில அரசுகள் உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும் என்று பாசன சங்கங்கள், பல்வேறு அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகள் கோரிக்கை விடுத்து வருகின்றன. கேரள அரசு அணை கட்டுவதால் அமராவதி அணைக்கு தண்ணீர் வரத்து குறையாது என்று கூறப்படுகிறது. மின்சாரம் தயாரித்த பிறகு மீண்டும் பாம்பாற்றின் வழியாக அமராவதிக்கு தண்ணீர் வரும் வகையில் தளஅமைப்பு உள்ளதாக கூறப்படுகிறது. தண்ணீர் வரும் என்று தளஅமைப்பு கூறலாம். ஆனால் தண்ணீர் வருமா என்பதுதான் விவசாயிகளின் கேள்வி.
அரசின் எந்தவித உதவியும் இல்லாமல் சிறு, குறு விவசாயிகளே வாய்க்கால்களை தூர்வாரி விவசாயம் செய்யும் நிலையில், அணைக்கு முக்கிய நீர் ஆதாரமாக உள்ள ஆற்றில் கேரள அரசு அணை கட்டினால் அணையை நம்பி பாசனம் பெற்று வரும் நிலங்கள் அழியக்கூடிய சூழ்நிலை ஏற்படும். எனவே மத்திய–மாநில அரசுகள் உடனடியாக நடவடிக்கை எடுத்து கேரள அரசு பாம்பாற்றில் அணை கட்ட நடவடிக்கை எடுத்து வருவதை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும். இல்லை என்றால் பாசன விவசாயிகள் மட்டுமல்லாமல், பொதுமக்களையும் திரட்டி போராட்டம் நடத்தவும் தயாராக உள்ளோம்.
இவ்வாறு அந்த அறிக்கையில் கே.கே.விஸ்வநாதன் கூறி உள்ளார்.

## வயநாடு மார்க்கெட்டில் இஞ்சி விலை ‘கிடுகிடு’ உயர்வு

கோழிக்கோடு,ஏப்.24–
வயநாடு மார்க்கெட்டில் கடந்த சில நாட்களாக இஞ்சி விலை அதிகரித்து உள்ளது. ஒரு குவிண்டால் இஞ்சி கடந்த மாதம் 1500 ரூபாய்க்கு விற்றது. ஆனால் இப்போது மேலும் 600 ரூபாய் அதிகரித்து 2100 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இஞ்சிக்கு விலை அதிகரித்து உள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.
வயநாடு மாவட்டத்தில், மீனங்காடி, சுல்தான்பத்தேரி, வெல்லம்முண்டா, புல்பள்ளி, மானந்தவாடி, பனமரம், களியபற்றா ஆகிய பகுதிகளில் இஞ்சி பயிரிடப்படுகிறது. சுமார் 1500 விவசாயிகள் இஞ்சி பயிரிட்டு உள்ளனர். இஞ்சிக்கு விலை அதிகரித்து உள்ளதால் அதை பயிர் செய்ய விவசாயிகள் விரும்புகின்றனர். வயநாடு மார்க்கெட்டில் கொள்முதல் செய்யப்படும் அமெரிக்கா, ஐரோப்பா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

## நடப்பு சந்தைப்படுத்துதல் பருவத்தில்அரசின் கோதுமை கொள்முதல் 1.68 கோடி டன்னாக அதிகரிப்பு

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
கோதுமைக்கான சந்தைப்படுத்துதல் பருவம் (ஏப்ரல்–மார்ச்) இம்மாதம் 1–ந் தேதி தொடங்கியுள்ளது. நடப்பு 2010–11–ஆம் ஆண்டு பருவத்தில், இதுவரை, இந்திய உணவுக் கழகம் 1.68 கோடி டன் கோதுமையை கொள்முதல் செய்துள்ளது.
6 சதவீதம் அதிகம்
இது, சென்ற 2009–10–ஆம் ஆண்டு பருவத்தின் இதே காலத்தில் கொள்முதல் செய்யப்பட்ட அளவை விட 6 சதவீதம் அதிகமாகும். சென்ற பருவத்தின் இதே காலத்தில் இந்திய உணவுக் கழகத்தின் கோதுமை கொள்முதல் 1.58 கோடி டன்னாக இருந்தது. மத்திய அரசு, நடப்பு பருவத்தில் ஒரு குவிண்டால் கோதுமைக்கான கொள்முதல் விலையை ரூ.1,100–ஆக நிர்ணயித்துள்ளது.
கோதுமை சந்தைப்படுத்துதல் பருவம் ஏப்ரல் முதல் மார்ச் மாதம் வரையில் உள்ளது என்றாலும், பெருமளவு கொள்முதல் ஏப்ரல்–ஜூன் மாத காலத்தில்தான் மேற்கொள்ளப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. நடப்பு பருவத்தில் ஒட்டுமொத்த கோதுமை கொள்முதல் 2.62 கோடி டன்னாக அதிகரிக்கும் என மத்திய அரசு எதிர்பார்க்கிறது. இது முந்தைய பருவத்தில் 2.54 கோடி டன்னாக இருந்தது.
பிரதான உணவு
வட மாநிலங்களில் கோதுமையே பிரதான உணவாக உள்ளது. தற்போது நாட்டின் கோதுமை உற்பத்தி 8 முதல் 8.10 கோடி டன்னாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கோதுமை விளையும் முக்கிய பகுதிகளில் பகலில் உஷ்ணம் அதிகமாக இருந்தாலும், இரவில் வெப்ப நிலை குறைவாக உள்ளது. வறண்ட பருவநிலையால் பூச்சித் தாக்குதல் அபாயம் குறைவாக உள்ளது. இவை கோதுமை உற்பத்தி உயர்வதற்கான வாய்ப்பினை உருவாக்கியுள்ளன என அரசு அதிகாரிகள் தெரிவித்தனர்.
கோதுமை உற்பத்தியில் முன்னிலை வகிக்கும் மாநிலங்கள், குறிப்பாக பஞ்சாப் மற்றும் அரியானா ஆகியவை, ரபி பருவத்தில் கோதுமை மகசூல் அமோகமாக இருக்கும் என்று எதிர்பார்ப்பதாக தெரிவித்துள்ளன. இதன் அடிப்படையில் அரசின் கொள்முதலும் இதுவரை இல்லாத அளவிற்கு அதிகரிக்கும் என தெரிகிறது.
பஞ்சாப் மாநிலம்
ஏப்ரல் 1–ந் தேதியிலிருந்து இதுவரை பஞ்சாப் மாநிலத்தில் மட்டும் 85 லட்சம் டன் கோதுமை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. அரியானா மாநிலத்திலிருந்து 56 லட்சம் டன் கோதுமை பெறப்பட்டுள்ளது. மத்தியபிரதேசத்திலிருந்து வாங்கப்பட்டுள்ள கோதுமை 22 லட்சம் டன்னாகும்.
இந்த மூன்று மாநிலங்களிலும், சென்ற பருவத்தின் இதே காலத்தை விட கொள்முதல் குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரிகத்துள்ளது. ராஜஸ்தான் மாநிலத்தில் மட்டும் கொள்முதல் 55 சதவீதம் குறைந்து 2.55 லட்சம் டன்னாக உள்ளது. இது, முந்தைய பருவத்தின் இதே காலத்தில் 5.61 லட்சம் டன்னாக இருந்தது. உத்தரபிரதேசத்திலும் கோதுமை கொள்முதல் 34 சதவீதம் (4.05 லட்சம் டன்) குறைந்து 2.68 லட்சம் டன்னாக சரிவடைந்துள்ளது.
பஞ்சாப் மற்றும் அரியானாவில் மட்டும், விவசாயிகளிடமிருந்து, மொத்தம் 1.85 கோடி டன் கோதுமை வாங்கப்பட வாய்ப்புள்ளது. இது, சென்ற பருவத்தில் இவ்விரு மாநிலங்களிலும் கொள்முதல் செய்யப்பட்டதை காட்டிலும், 10 லட்சம் டன் அதிகமாகும். பஞ்சாபிலிருந்து 1.15 கோடி டன்னும், அரியானாவில் இருந்து 70 லட்சம் டன்னும் கொள்முதல் செய்யப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
உற்பத்தி
பருவ நிலை சாதகமாக அமைந்ததால், இந்த இரண்டு மாநிலங்களிலும் கோதுமை

உற்பத்தி 2.70 கோடி டன்னாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. ரபி பருவத்தில் (அக்டோபர்-மார்ச்), பஞ்சாப் மாநிலம் 1.55 கோடி டன்னும், அரியானா மாநிலம் 1.15 கோடி டன்னும் கோதுமை உற்பத்தி செய்யும் என அரசு வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளன.

சென்ற ஆண்டு சந்தைப்படுத்துதல் பருவத்தில் மத்திய அரசு, ஒட்டுமொத்த அளவில், 2.53 கோடி டன் கோதுமையை கொள்முதல் செய்தது. இதில் பஞ்சாப் மாநிலத்தின் பங்களிப்பு 1.08 கோடி டன்னாகவும், அரியானா மாநிலத்தின் பங்களிப்பு 6.93 கோடி டன்னாகவும் இருந்தது. சென்ற ஆண்டு மார்ச் மாதத்துடன் நிறைவடைந்த வேளாண் பருவத்தில் நாட்டின் கோதுமை உற்பத்தி 8.07 கோடி டன்னாக மிகவும் அதிகரித்து இருந்தது. இதனையடுத்து மத்திய அரசின் கொள்முதலும் சிறப்பான அளவில் அதிகரித்தது.

நெல் கொள்முதல்

மத்திய அரசின் நெல் கொள்முதலும் திருப்திகரமாக உள்ளது. நடப்பு சந்தைப்படுத்துதல் பருவத்தில் (அக்டோபர்-செப்டம்பர்) இதுவரை இந்திய உணவுக் கழகத்தின் நெல் கொள்முதல் 2.60 கோடி டன்னை எட்டியுள்ளது.

சென்ற 2009-ஆம் ஆண்டு கரீஃப் பருவத்தில் (ஜூன்-அக்டோபர்) பருவ மழை பொய்த்ததால் நாடு முழுவதுமாக 300-க்கும் மேற்பட்ட மாவட்டங்கள் வறட்சியின் பிடியில் சிக்கின. இதனால் நெல் மகசூல் குறைந்து போனது. இதனைக் கருத்தில் கொண்டு மத்திய அரசு, நடப்பு 2009-10-ஆம் ஆண்டு சந்தைப்படுத்துதல் பருவத்தில், நெல் கொள்முதல் இலக்கை 2.60 கோடி டன்னாக குறைத்தது. இந்நிலையில், நடப்பு பருவத்தில் சுமார் 7 மாதங்களிலேயே கொள்முதல் இலக்கு எட்டப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இதனையடுத்து செப்டம்பர் மாதத்துடன் நிறைவடையும் முழு பருவத்தில் நெல் கொள்முதல் 3 கோடி டன்னாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## கோத்தகிரி நேரு பூங்காவில் பூத்து குலுங்கும் ரோஜா மலர்கள்

கோத்தகிரி, ஏப்.24-

கோத்தகிரி நேரு பூங்காவில் ரோஜா மலர்கள் பூக்க தொடங்கி உள்ளன.

நேரு பூங்கா

கோத்தகிரி காமராஜ் சதுக்கம் பகுதியில் அமைந் துள்ளது நேரு பூங்கா. தோட்டக் கலை துறை பராமரிப்பின் கீழ் கொண்டு வரப்பட்ட நேரு பூங்கா தற்போது நன்கு பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறது.

பசுமையான புல்வெளிகள், சுற்றுலா பயணிகள் நடந்து செல்ல அழகிய நடை பாதைகள், நடைபாதையின் இருபக்கமும் மனதை கொள்ளை கொள்ளும் வண்ண, வண்ண மலர் செடிகள் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.

பூங்காவின் மைய பகுதியில் வட்ட வடிவில் ரோஜா மேடை அமைக்கப்பட்டு உள்ளது. ரோஜா மேடைக்கு செல்ல 4 நடைபாதைகள் அமைக்கப்பட்டு உள்ளது. பெங்களூரில் இருந்து கொண்டு வரப்பட்ட ரோஜா செடிகள் இங்கு நடவு செய்யப்பட்டு உள்ளது.

ஊதா, பிங்க், ரோஸ், சிவப்பு, மஞ்சள், வெள்ளை, ஆரஞ்ச் உள்பட பல்வேறு வண்ணங்களில் தற்போது ரோஜாக்கள் மலர தொடங்கி உள்ளன. பூங்காவின் நுழைவு

வாயிலில் அமைக்கப்பட்டுள்ள கல்வெட்டிற்கு அருகில் ஹைபிரீடு டேலியா செடிகள் நடவு செய்யப்பட்டு உள்ளன. இதில் சிகப்பு, ஆரஞ்ச், வெள்ளை, இளஞ்சிவப்பு, வயலட், மஞ்சள், வெளிர் சிவப்பு உள்பட பல வண்ணங்களில் டேலியா மலர்கள் மலர தொடங்கி உள்ளது.

பூக்க தொடங்கி உள்ளன

இது தவிர டெல்போனியா, பிட்டர்பிளை, டயாந்தஸ், மேரி கோல்டு, பிரெஞ்ச் மேரி கோல்டு, சால்வியா, பிட்டோனியா, இன்கா மேரி கோல்டு, பால்சம், பேன்சி, பேர்டு ஆப் பேரடைஸ், ஸ்பீக்கர் லில்லி, கோழி கொண்டை பூ, சிறிய ரக டேலியாக்கள் உள்பட பல வண்ணங்களில் மலர்கள் பூக்க தொடங்கி உள்ளன.

மே மாதம் 29 மற்றும் 30–ந் தேதி கோத்தகிரி நேரு பூங்காவில் 3–வது முறையாக காய்கறி கண்காட்சி நடைபெற உள்ளது. இதற்கான ஏற்பாடு கள் தோட்டக்கலை துறையின் மூலம் செய்யப்பட்டு வரு கிறது. தற்போது நேரு பூங்கா விற்கு சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது.